பக்கங்கள்:-18

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2055 | கார்த்திகை 27 | வியாழக்கிழமை | 12.12.2024 | அதிர்வு 132

### கடற்படைச் சிப்பாய் உயிரிழந்த வழக்கு:

## இந்திய மீனவர்கள் 9 பேர் விடுதலை!

### படகோட்டிக்கு அபராதம்

(விரிவான செய்தி 3 ஆம் பக்கத்தில்)

# வடக்கு மாகாணத்தை உலுக்கும் மர்மக் காய்ச்சல்! பருத்தித்துறையைச் சேர்ந்த மேலும் ஒருவர் சாவு!!

### மந்திகையில் மட்டும் 40 பேருக்குச் சிகிச்சை

மர்மக் காய்ச்சல் பாதிப்புடன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த பருத்தித்துறையைச் சேர்ந்த மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மேற்படி நபர் மர்மக் காய்ச்சல் பாதிப்புடன் பருத்தித்துறை – மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று புதன்கிழமை உயிரிழந்துள்ளார். 05

### 7 பேரைச் சாகடித்த மர்மக் காய்ச்சல்

# தடுப்பு நடவடிக்கையை உடனே விரைவாக்குக!

### வடக்கு ஆளுநர் வேதநாயகன் உத்தரவு கொழும்பிலிருந்து இரு குழுக்கள் வருகை

வடக்கு மாகாணத்தில் அடையாளம் காணப்படாத காய்ச்சல் காரணமாக நேற்று வரையில் 7 பேர் உயிரிழந்துள்ள நிலையில் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகளை விரைவுபடுத்துவதற்காக தேவையேற்படின் மாவட்டத்தின் ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவுகளிலிருந்து ஆளணியினரைப் பெற்றுப்பயன்படுத்துமாறு யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரனுக்கு, வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆலோசனை வழங்கினார். 03






### 10,000 பேருக்கு எலிக்காய்ச்சல்

இலங்கையில் எலிக்காய்ச்சல் காரணமாக இந்த வருடத்தில் இதுவரை 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். 05

### மருத்துவ நிபுணர்களின் பங்கேற்புடன்

## பருத்தித்துறையில் நேற்று அவசர கலந்துரையாடல்!

### ஒரு நாள் காய்ச்சலாயினும் வைத்தியசாலையை நாடவும் என்று பொதுமக்களுக்கு விசேட அறிவிப்பு

வடக்கை அச்சுறுத்தும் மர்மக் காய்ச்சல் யாழ். வடமராட்சி பிரதேசத்தில் தீவிரமடைந்து வரும் நிலையில் பருத்தித்துறை – மந்திகை ஆதார வைத்தியசாலையில் நேற்று அவசர கலந்துரையாடல் நடைபெற்றது.

வைத்திய நிபுணர்கள் உள்ளிட்ட 03







'கலாநிதி' பட்ட விவகாரத்தினால் தென்னிலங்கை அரசியலே ஒரு கலக்கு கலங்குகிறது. சபாநாயகர் அசோக ரன்வில தன்னுடைய சுயவிவர கோவையிலும், பிற அறிவித்தல்களிலும், தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளின் போதும் தன்னுடைய பெயருக்கு முன்னால் 'கலாநிதி' என்ற பட்டத்தைச் சேர்த்துக்கொண்டு செயல்பட்டமையின் விளைவை இப்போது எதிர்கொள்கின்றார்.

அது தென்னிலங்கை அரசியலுடன் தொடர்புபட்ட விடயம் என விட்டு விடுவோம். ஆனால் தமிழர்களாகிய – கற்றறிந்த மக்களாகிய – நாம் இந்தக் 'கலாநிதி' பட்ட விடயத்தில் பண்ணுகின்ற குளறுபடியை யாரிடம் சொல்லி முறையிடுவது என்று தெரியவில்லை.

பட்டப் படிப்பு, முதுநிலைப் பட்டப் படிப்பு முடிந்து, கலாநிதி பட்டத்துக்கான (பிஎச்.டி) படிப்பு பூர்த்தி செய்து அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் அந்தப் பட்டத்தைப் பெறுவோரே அந்த 'கலாநிதி' அடைமொழியைப் 05



# இந்தியாவின் உதவி எப்போதும் தேவை!

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு




இந்தியாவின் ஒத்துழைப்பும், உதவியும் எப்போதும் எங்களுக்குத் தேவை என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

இந்திய தொழில்நுட்ப மற்றும் பொருளாதார ஒத்துழைப்புத் திட்டத் தினம் யாழ்ப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் கலாசார நிலையத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்றது. இதன்போது, மகாகவி சுப்பிரமணியம் பாரதியாரின் 142 ஆவது பிறந்த நாள் நினைவு தினத்தை முன்னிட்டு அவரது உருவப்படத்துக்கு ஆளுநர் உட்பட அதிதிகள் மலர்மாலை அணிவித்தனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய ஆளுநர், எங்கள் சேவைகள் மெருகூட்டப்படுவதற்குப் பயிற்சிகள் முக்கியம் என்று குறிப்பிட்டார்.

தாம் பதவிக்கு வந்த காலத்தில் இவ்வாறான பயிற்சிகளுக்கான வாய்ப்புக்கள் கிடைக்கப்பெறவில்லை என்றும், தற்போது வழங்கப்படும் இந்தப் பயிற்சிகளை உத்தியோகத்தர்கள் உரியமுறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும் ஆளுநர் தெரிவித்தார்.

மனித வளத்தை மேம்படுத்தாவிட்டால் மக்களுக்கான சேவைகளைச் சிறப்பாக வழங்க முடியாது என்றும் ஆளுநர் குறிப்பிட்டார்.

ஐரெக் திட்டத்தின் கீழ் இந்தியாவிலுள்ள தரமான கல்வி நிலையங்களிலேயே பயிற்சிகள் வழங்கப்படுகின்றன என்றும், அந்தப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்வதன் ஊடாக சிறந்த சேவைகளை எமது மக்களுக்கு வழங்கக்கூடியதாகவும் இருக்கும் என்றும் ஆளுநர் தனது உரையில் தெரிவித்தார்.

"இந்தியா எமக்குப் பல வழிகளிலும் உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் வழங்கி வருகின்றது. அது தொடர வேண்டும். குறிப்பாக வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் விவசாயம் முக்கியமானது. விவசாயத்துறை சார்ந்த பயிற்சிகளை வழங்குவதற்கு முன்வரவேண்டும்." – என்றும் ஆளுநர் தனது உரையில் கோரிக்கை முன்வைத்தார்.

வடக்கு மாகாண ஆளுநரின் கோரிக்கைக்கு இந்தியத் துணைத்தூதரகத்தின் சார்பில் சாதகமான பதில் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி, வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் சிறி.சற்குணராஜா ஆகியோர் கலந்துகொண்டனர்.

(மேலும் படங்கள், விவரங்கள் 14 ஆம் பகத்தில்)







## கடற்படைச் சிப்பாய் உயிரிழந்த வழக்கு:

# இந்திய மீனவர்கள் 9 பேர் விடுதலை!

## படகோட்டிக்கு 35 இலட்சம் ரூபா அபராதம்

(ந.லோகதயாளன்)

இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகுடன் இந்திய மீன்பிடிப் படகு மோதி ஒரு கடற்படைச் சிப்பாய் உயிரிழந்த வழக்கில் படகோட்டி தவிர்ந்த 9 இந்திய மீனவர்களும் மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டனர்.

கடந்த ஜூன் மாதம் 25ஆம் திகதி இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டிய இந்திய மீன்பிடிப் படகைப் பிடிக்க முயன்ற இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகுடன் இந்திய மீன்பிடிப் படகு மோதி விபத்துக்குள்ளானது. இதன்போது கடற்படையின் ரோந்துப் படகில் இருந்த காங்கேசன்துறை கடற்படைத் தளத்தைச் சேர்ந்த சிப்பாய் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

இதையடுத்து விபத்துக்குள்ளான இந்திய மீன்பிடிப் படகில் இருந்த 10 இந்திய மீனவர்கள் மீதும் காங்கேசன்துறைப் பொலிஸார், மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

இந்த வழக்கை நேற்றுப் புதன்கிழமை விசாரித்த நீதிவான் சுபரஞ்சனி ஜெகநாதன், படகில் இருந்த 10 இந்திய மீனவர்களில் படகோட்டி தவிர்ந்த ஏனைய 9 மீனவர்களையும் நிபந்தனைகளுடன் விடுதலை செய்து உத்தரவிட்டார்.

படகோட்டிக்கு இரண்டு குற்றச்சாட்டுக்களின் கீழ் 35 இலட்சம் ரூபா அபராதத் தொகையை நீதிவான் விதித்தார்.

மீன்பிடிப் படகு மோதி ஏற்பட்ட விபத்தில் கடற்படைச் சிப்பாய் உயிரிழந்தமையால் அவரது குடும்பத்துக்கு 10 இலட்சம் ரூபா இழப்பீடும், கடற்படை ரோந்துப் படகு சேதம் அடைந்ததால் 25 இலட்சம் ரூபா இழப்பீடும் என மொத்தமாக 35 இலட்சம் ரூபா அபராதத் தொகையைப் படகோட்டி கட்ட வேண்டும் எனவும், அபராதத் தொகையைக் கட்டத் தவறும் பட்சத்தில் படகோட்டிக்கு ஓராண்டு சிறைத் தண்டனை விதிக்கப்படும் எனவும் நீதிவான் உத்தரவிட்டார்.

இதையடுத்துப் படகோட்டி மீண்டும் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

## தடுப்பு நடவடிக்கையை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 6 பேரும், முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒருவருமாக இதுவரை உயிரிழந்துள்ள நிலையில் இதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதாரத்துறையினர் எடுத்து வரும் நடவடிக்கைகள் தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருடன், ஆளுநர் தொலைபேசியில் நேற்றுப் புதன்கிழமை மாலை உரையாடினார்.

உயிரிழப்புக்கான காரணம் இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை எனவும், மாதிரிகள் கொழும்பு மற்றும் கண்டிக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் குறிப்பிட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர், எலிக்காய்ச்சலாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவித்தார். அத்துடன் வேறு வைரஸ் தொற்றுக்களாகவும் இருக்கக்கூடும் என்ற நியாயமான சந்தேகங்கள் இருப்பதாகவும், அது தொடர்பான விவரங்களையும் ஆளுநரிடம் குறிப்பிட்ட அவர், இது தொடர்பில் ஆராய்வதற்காக கொழும்பிலிருந்து இரண்டு குழுக்கள் இன்றும் (வியாழன்), நாளையும் (வெள்ளி) வருகை தரவுள்ளன என்றும் தெரிவித்தார்.

இந்தக் காய்ச்சலுக்குரிய தடுப்பு மருந்துகள் வேறு மாவட்டங்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டு விநியோக நடவடிக்கைகள் இடம்பெறுகின்றன எனவும், அதேபோன்று ஒரு தொகுதி மருந்துக்கு கொழும்பு சுகாதார அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது என்று பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுட்டிக்காட்டினார்.

இதேவேளை, இந்தத் தடுப்பு நடவடிக்கைகளை மருத்துவத்துறையினர் அர்ப்பணிப்புடன் மேற்கொள்ளுவதாகக் குறிப்பிட்ட ஆளுநர், மாவட்டத்தில் இந்தக் காய்ச்சலால் பாதிப்புறாத ஏனைய சுகாதார மருத்துவ அதிகாரிகள் பிரிவிலிருந்து மருத்துவ அதிகாரிகள், பொதுச் சுகாதார பரிசோதகர்களைப் பெற்று அவற்றை வினைத்திறனுடன் மேற்கொள்ளுமாறும் ஆலோசனை வழங்கினார்.

## பருத்தித்துறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி.)

சுகாதாரத் தரப்பினர் இதில் பங்கேற்று தற்போதைய நிலைமைகள் தொடர்பில் ஆராய்ந்தனர்.

இதன்போது இதுவரை உயிரிழந்த அனைவரும் எலிக்காய்ச்சல் பரவும் அடிப்படைச் சூழல்களில் இருந்து மாறுபட்டு இயல்பான சூழலில் வாழ்ந்து வந்துள்ளார்கள் எனத் தெரிய வந்துள்ள நிலையில், மர்மக் காய்ச்சலுக்கான அடிப்படை தொடர்பில் உடனடியாக ஒரு முடிவுக்கு வரமுடியாதவாறு குழப்ப நிலை ஏற்பட்டுள்ளது எனவும், வழமைக்கு மாறான குண இயல்புகளைக் கொண்ட வைரஸ் அல்லது பக்டீரியா பரவல் காரணமாக இந்தக் காய்ச்சல் ஏற்படலாம் என்று வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலின் நிறைவில் மர்மக் காய்ச்சல் பாதிப்பு அடையாளம் காணப்பட்ட பகுதிகளுக்குச் சென்று விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வது எனவும், பாதிப்புகள் அடையாளம் காணப்படும் இடத்தில் தடுப்பு மருந்துகளை நேரடியாக வழங்குவது எனவும், ஒரு நாள் காய்ச்சலாக இருப்பினும் அருகில் உள்ள அரச வைத்தியசாலைக்குச் செல்லுமாறு பொதுமக்களுக்கு அறிவுறுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.




# பயங்கரவாத தடைச் சட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு ஜனாதிபதியிடம் கோரிக்கை

(பா.சதீசன்)

இலங்கையில் காணப்படுகின்ற பயங்கரவாத தடுப்பு சட்டத்தை உடனடியாக ஜனாதிபதி நிறுத்த வேண்டும் என முல்லைத்தீவில் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திகான நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட மேலாளர் கணபதி பிரஷாந்த் தெரிவித்தார்.

முல்லைத்தீவில் சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்தி கான நிறுவனத்தின் முல்லைத்தீவு மாவட்ட

அலுவலகத்தில் வைத்து நேற்று முன்தினம் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்,

“இலங்கையில் 1979 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த பயங்கரவாத தடுப்புச் சட்டம் குறித்த காலங்களில் இல்லாமல் ஆக்கப்படும் எனக்கோரியே இது உருவாக்கப்பட்டிருந்தது. ஆனால் இன்றைக்கு 45 வருடங்களாக தொடர்ச்சியாக இந்த பயங்கரவாத தடைச்சட்டம் தமிழ், முஸ்லிம் மக்களையே அதிகம் பாதித்து வந்துள்ளது.

இருந்த போதும் தற்போது ஆட்சிக்கு வந்திருக்கின்ற ஜனாதிபதி அவர்கள் இந்த சட்டத்தை தான் உடனடியாக நிறுத்துவதாக கோரி பல மேடைகளில் வாக்குறுதி வழங்கி இருந்தார். ஆனால் இதுவரையும் இந்த சட்டங்கள் நிறுத்துவதற்கு எந்த நடைமுறையும் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. ஆனால் கடந்த காலங்களில் நினைவேந்தலை மேற்கொண்ட நபர்களாக இருக்கலாம் அல்லது திருகோணமலையை சேர்ந்த சமூக செயற்பாட்டாளராக இருக்கலாம் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைக்காக தொடர்ச்சியாக அழைக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே ஜனாதிபதியினுடைய வாக்குறுதியை உடனடியாக நிறைவேற்றுமாறு சூழலியல் மற்றும் சமூக அபிவிருத்திக்கான நிறுவனம் கூறி நிற்கின்றது.

வடகிழக்கு பகுதியிலே வாழ்கின்ற தமிழர்கள் தங்களுடைய அதிகார பகிர்வை நோக்கிய போராட்டங்களில் ஈடுபடுகின்ற போது அதனை முழுமையாக மழுங்கடிக்க செய்வதற்கு அல்லது மௌனிக்க செய்வதற்கு இந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் ஊடாக இதனை தலைமை தாங்கி நடத்துகின்ற தலைமைகள் விசாரணைகளுக்கு, கைதாகுதவால் அவர்களுடைய போராட்டங்கள் கூட மௌனிக்கப்பட்டு கொண்டிருக்கின்றது. ஆகவே இந்த பயங்கரவாத தடைசட்டம் முழுக்க வடக்கு, கிழக்கு சிறுபான்மையின தமிழ், முஸ்லிம் மக்களையே அதிகம் பாதிக்கின்றது. ஆகவே இதை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.”– என்றார்.

# நட்சத்திர விருந்தகங்களுக்கு புதிய மதுபான அனுமதி




எதிர்காலத்தில் நட்சத்திர விருந்தகங்கள் மற்றும் உணவகங்களுக்காக புதிய மதுபான அனுமதி பத்திரங்களை விநியோகிக்க நடவடிக்கை எடுப்பதாக மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

இதற்காக சுற்றுலா சபையின் அனுமதி மற்றும் மதுவரி நிபந்தனைகளுக்கமைய ஏனைய தரவுகள் வழங்கப்பட வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதற்காக நிதி அமைச்சரின் அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும் என மதுவரி திணைக்களம் தெரிவித்துள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயன்படுத்த முடியும்.

‘கலாநிதி’ பட்டம் பெற்றவர்களை ஆங்கிலத்தில் ‘டொக்டர்’ என்று அழைப்பார்கள். அதே நேரம் மருத்துவ சிகிச்சை வழங்குகின்ற வைத்தியரையும் நாங்கள் ‘டொக்டர்’ என்று அழைப்பது வழக்கம்.

பிஎச்.டி பட்டம் பெற்றவர்களை ‘கலாநிதி’ என்று தமிழில் அழைக்கும் போது ஆங்கிலத்தில் அதனை டொக்டர் என்று சொல்வதால், டொக்டர் என்று நாம் அழைக்கும் மருத்துவர்களையும் அதே கலாநிதி அணிக்குள் சேர்த்து விட்டார்கள் நம்மவர்கள். சாதாரண வைத்தியர்களையும் ‘வைத்திய கலாநிதி’ என அழைக்கும் பண்பு – போக்கு – நம் மத்தியில் வந்து விட்டது.

வழக்கமாக சட்டத்துறையில் பட்டதாரியை ‘சட்டமாணி’ என்று சொல்லுவோம். கலைத் துறையில் பட்டப்படிப்பு பூர்த்தி செய்தவரை ‘கலைமாணி’ என்று சொல்லுவோம். அதேபோல மருத்துவத் துறையில் பட்டப்படிப்பான எம்.பி.பி.எஸ். முடித்த வைத்தியருக்கு ‘மருத்துவமாணி’ பட்டம்தான் கொடுக்கப்படுகின்றது. அவர்களை ‘வைத்தியர்’ என்றோ அல்லது ‘மருத்துவர்’ என்றோ அல்லது ‘டொக்டர்’ என்றோ அழைப்பதில் தவறில்லை.

அந்த மருத்துவ பட்டப்படிப்பு முடித்து, அதன் பின்னர் மருத்துவத்துறையில் பிஎச்.டி பட்டம் பெற்றால் மட்டுமே அவரை ‘வைத்திய கலாநிதி’ என்று அழைக்க முடியும். ஆனால் நம்மவர்கள் – தமிழர்கள் – சாதாரண ‘மருத்துவமாணி’ பட்டம் பெற்ற எம்.பி.பி.எஸ். பட்டதாரிகள் எல்லோரையும் ‘வைத்திய கலாநிதி’ என்று அழைக்கின்ற போக்கு சாதாரணமாக நடக்கின்றது. சில சமயங்களில் அதையும் தாண்டி, உதவி வைத்தியர்கள் அல்லது பதிவு செய்யப்பட்ட வைத்தியர்கள் (அப்போதிகரிமார்) போன்றவர்களையும் ‘வைத்திய கலாநிதி’ என்று அழைக்கின்ற – அடைமொழி வைத்துக் குறிப்பிடுகின்ற – பண்பு நம் மத்தியில் சர்வ சாதாரணமாக இருக்கின்றது.

அதிகமாக நம் மத்தியில் பல்வேறு நிகழ்ச்சிகள் தொடர்பாக வருகின்ற அழைப்பிதழ்கள், துண்டுப் பிரசுரங்களில் வெளியாகும் பெயர்களில் அரைவாசிக்கும் மேற்பட்ட ‘ வைத்திய கலாநிதிகள்’ என்று குறிப்பிடப்படுபவர்கள் வெறும் வைத்தியமாணிகள் மட்டுமே. நாங்கள்தான் அவர்களுக்கு ‘வைத்திய கலாநிதி’ பட்டத்தை கொடுத்து எங்களைக் கல்லாநிதிகளாக்கிக் கொண்டிருக்கின்றோம்.

தெற்கில் ஒரு ‘கலாநிதி’ பட்டத்தைத் தவறாக பயன்படுத்தியமைக்கு இத்தனை அரசியல் புயல் வீசுகிறது. நம் மத்தியில் இந்த ‘கலாநிதி’ பட்டம் அதுவும் வைத்தியர்கள் விடயத்தில் கண்மண் தெரியாமல் பயன்படுத்தப்படுகின்றது – ஒரு பிரச்சனையும் இல்லாமல்...!

---

## வடக்கு மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பருத்தித்துறையைச் சேர்ந்த ஆனந்தகுமார் (வயது47) என்ற நபரே சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து வடக்கு மாகாணத்தில் இதுவரை மர்மக் காய்ச்சலுக்குப் பலியானவர்களின் எண்ணிக்கை 7 ஆக அதிகரித்துள்ளது.

நேற்று உயிரிழந்த பருத்தித்துறையைச் சேர்ந்த நபரின் மாதிரிகளும் கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ள நிலையில், அறிக்கைகள் கிடைத்த பின்னரே இறப்புக்கான காரணம் என்ன என்பது தொடர்பில் உறுதியாகத் தெரியவரும்.

இதேவேளை, மர்மக் காய்ச்சல் அறிகுறிகளுடனும், சடுதியான சுகவீனத்துடனும் வடக்கு வைத்தியசாலைகளை நாடுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது. பருத்தித்துறை – மந்திகை ஆதார வைத்தியசாலையில் மட்டும் இதுவரை 40 பேர் மர்மக் காய்ச்சல் காரணமாக சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர். அவர்கள் அனைவரின் உடல்நிலை தொடர்பிலும் தீவிரமான கண்காணிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சிலரின் உடல்நிலை சடுதியாகப் பாதிக்கப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

“அண்மையில் பெய்த கனமழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பேரிடரால், எலிக் காய்ச்சல் பரவக்கூடிய சாத்தியங்கள் உள்ளன. அத்துடன், வேறுசில விலங்குகளின் மலத்தொற்றாலும் இவ்வாறான நோய்நிலை ஏற்படும் சாத்தியங்கள் உள்ளன. எனவே, பொதுமக்கள் தமது சுகாதாரம், குடிதண்ணீர் ஆரோக்கியம் என்பவற்றில் மிகுந்த அவதானத்துடன் இருக்க வேண்டும். திடீர் காய்ச்சல் மற்றும் சடுதியான சுகவீனம் ஏற்பட்டால் உடனடியாக வைத்தியசாலையை நாட வேண்டும்.” – என்று சுகாதாரத்துறையினர் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

---

## 10, 000 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தொற்று நோய்த் தடுப்புப் பிரிவின் விசேட வைத்தியர் குமுது வீரக்கோன் இதனைத் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் எலிக்காய்ச்சல் நோயாளர்களின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.



# கொடுப்பனவு வழங்கப்படாமைக்கு மின்சார சபை தொழிற்சங்கம் எதிர்ப்பு




இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்கு வருடாந்த ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்படாமைக்கு மின் சார சபை தொழிற்சங்கங்கள் எதிர்ப்பு வெளியிட்டுள் ளன.

ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்குவதால் மின் கட்டண குறைப்புக்கு எந்தவித பாதிப்பும் ஏற்படாது என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இலங்கை மின்சார சபை ஊழியர்களுக்குக் கடந்த இரண்டு வருடங்களாக ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப் படவில்லை.

எனவே, டிசம்பர் 10 ஆம் திகதிக்கு முன்னர் கட்டாயமாக அவர்களுக்கு ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கப்பட வேண்டுமென இலங்கை மின்சார ஊழியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் அண்மையில் தெரிவித்திருந்தார்.

எனினும் இந்த கோரிக்கைக்கு மின்சார சபையின் பணிப் பாளர் சபை அங்கீகாரம் வழங்கவில்லை என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# வேட்புமனுக்களை இரத்துச் செய்வதற்கான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பம்




கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் வேட்புமனுக் களை இரத்துச் செய்வதற்கான சட்டத்தில் திருத்தம் மேற் கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொதுநிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு தெரிவித்துள்ளது.

சட்டவரைஞர் திணைக்களத்தால் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படுவதாக அமைச்சர்,பேராசிரியர் சந்தன அபேரத்ன தெரிவித்தார்.

கட்சித் தலைவர்களின் இணக்கப்பாட்டுடன் கடந்த உள்ளூ ராட்சி மன்றத் தேர்தலுக்காக தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களை இரத்து செய்வதற்கு அமைச்சரவை தீர்மா னித்தது.

அதற்கமைய, உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டமூலத் தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த திருத்தங்கள் சட்ட மா அதிபர் திணைக்களத் திற்கு அனுப்பிவைத்ததன் பின்னர், எதிர்வரும் வாரங்க ளில் நாடாளுமன்றத்திலும் சமர்ப்பிக்கவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

2022 ஆம் ஆண்டின் பின்னர் புதிதாக சேர்க்கப்பட்ட 10 இலட்சம் புதிய வாக்காளர்களுக்கு வாக்களிப்பதற் கான சந்தர்ப்பத்தை ஏற்படுத்துவதும் வேட்புமனுவை இரத்து செய்வதற்கான முக்கிய காரணியாகும் எனவும் அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

# அஸ்வெசும பயனாளிகளுக்கு இன்று முதல் கொடுப்பனவு




அஸ்வெசும பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் டிசம்பர் மாதத்துக்கான கொடுப்பனவு தொகையை இன்று வரவு வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும நலன்புரி நன்மைகள் சபை இதனைத் தெரிவித்துள்ளது.

இதன்படி எதிர்வரும் 13 ஆம் திகதி முதல் அஸ்வெசும பயனாளிகள் தங்களது வங்கிக் கணக்குகளிலிருந்து கொடுப்பனவு தொகையைப் பெற்றுக்கொள்ள முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது

# ஊடகவியலாளர் தங்கவேல் சுமனுக்கு இளம் கலைஞர் விருது வழங்கப்பட்டது





ஊடகவியலாளர் தங்கவேல் சுமன் “இளம் கலைஞர்” விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

கூத்து ஆற்றுகைக்காக தங்கவேல் சுமனுக்கு இந்த விருது வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் 2024 ஆம் ஆண்டுக்காக இலக்கிய விழா நேற்று புதன்கிழமை திருகோணமலை இந்து கலாசார மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போது கிழக்கு மாகாணத்தில் 2022, 2023 மற்றும் 2024 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட பல துறைகள் சார்ந்தவர்களுக்கு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இதன்போது தங்கவேல் சுமன் சிறு வயது முதல் தற்போது வரை கூத்துக்கலையில் சிறப்பாக ஈடுபட்டுவருகின்றதன் அடிப்படையில் இளம் கலைஞர் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்த லால் ரத்னசேகர, கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## வெளிப்படைத் தன்மை எங்கே?

சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல தமது சுய விவரப் பதிவில் தம்மை 'கலாநிதி' என்று குறிப்பிட்டுத் தமது கல்வித் தகைமை குறித்து வெளிப்படுத்திய கருத்து தவறானது எனத் தெரிவித்து எதிர்க்கட்சிகள் கிளப்பி வரும் ஆட்சேபம் ஆளும் தேசிய மக்கள் சக்திக்கு பெரும் தலையிடியாக மாறியிருக்கின்றது.

அழுத்தம் அதிகரித்தமையால் இது விடயத்தில் தமது கருத்தை - நிலைப்பாட்டை - சபாநாயகர் பொறுப்புணர்வுடன் வெளிப்படுத்துவார் என ஆளும் தரப்பில் 'சமாளிப்பு'க் கூறப்பட்டாலும், அவர் தொடர்ந்து அதீத அமைதி பேணுவது அரசுக்கு மாறான - எதிர் மாறான - கருத்தை மக்கள் மனதில் ஏற்படுத்தி வருவது கண்கூடு.

சபாநாயகர் அசோக சபுமல் ரன்வல, முன்னர் கூறியமை போன்று ஜப்பானில் உள்ள வஸேடாப் பல்கலைக்கழகத்தில் கலாநிதி பட்டம் பெறவில்லை என குற்றஞ்சாட்டும் - அவரது கல்விச்சான்றிதழ்களுக்கு சவால் விடுக்கும் - ஆதாரங்களை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலதா அத்துகோறளை ஊடகங்களுக்குச் சமர்ப்பித்துள்ளார்.

சபாநாயகர் ரன்வலவின் தகுதி குறித்து எதிர்க்கட்சிகள் குற்றம்சாட்டியமையைத் தொடர்ந்து, 'கலாநிதி' என்ற கல்வித் தகைமைப் பட்டத்தை நாடாளுமன்ற இணையத்தளம், சபாநாயகரின் சுயவிவரப் பதிவிலிருந்து சத்தம் சந்தடியின்றி நீக்கி விட்டது.

ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு அடுத்தபடியாக இலங்கையில் மூன்றாவது உயர் பதவியில் இருப்பவர் சபாநாயகர். நீதித்துறை மற்றும் பொலிஸ் படை உட்பட முக்கியமான துறைகளின் உயர் நியமனங்களை மேற்பார்வை செய்து உறுதிப்படுத்தும் அரசமைப்புக் கவுன்ஸிலுக்கும் சபாநாயகரே தலைமை தாங்குகிறார் என எதிர்க்கட்சிகள் சுட்டிக்காட்டுகின்றன.

அத்தகைய பொறுப்பில் இருப்பவர் தமது பதவிநிலையைஒட்டி முன்மாதிரியாகஇருக்க வேண்டும், தமது கல்வித் தகைமை குறித்து பொய்யுரைப்பவர் சபாநாயகர் போன்ற உயர்பதவியில் இருக்கத் தகுதியற்றவர் என்று எதிர்க்கட்சிகள் கூறுவதில் அர்த்தம், நியாயம் இல்லாமலில்லை.

அரசமைத்திருக்கும் தேசிய மக்கள் சக்தியின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினருடன், சமீபத்தில் நியமிக்கப்பட்ட ஒரு துணை அமைச்சரும் தங்களின் கல்வித் தகைமைகள் குறித்து 'கப்ஸா' விட்டுள்ளனர் என இப்போது விமர்சிக்கப்படுகின்றது.

ஜே.வி.பி.யும் அதன் புதிய அவதாரமான தேசிய மக்கள் சக்தியும் எதிர்கட்சியில் இருந்தபோது அவர்களின் அரசியல் எதிரிகளின் கல்வித் தகுதியின்மையின் அடிப்படையில் அவர்களை முத்திரை குத்துவதில் சிறந்து விளங்கியமையை இப்போது பல தரப்புகளும் சுட்டிக் காட்டுகின்றன. அவர்கள் அப்போது தங்களின் அரசியல் எதிரிகளின் கல்வி மற்றும் தொழில்முறை தகுதிகளை கேள்வி கேட்கும் வாய்ப்பை முழு மூச்சாகப் பயன்படுத்தினர். அப்போதைய ஆட்சியாளர்களைக் கேலி செய்தார்கள். இப்போது நிலைமை அப்படியே தலைகீழாக மாறியிருக்கின்றது.

அரசாங்கமும் சபாநாயகரும் இந்தக் குற்றச்சாட்டுகள் குறித்து தெளிவுபடுத்துவதும், முழு அரசாங்கத்தின் நம்பகத் தன்மையும் கேள்விக்குறியாக மாறுவதற்கு முன்னர் பிராயச் சித்தம் செய்வதும் விவேகமானவையாகும்.

எதிர்த் தரப்பில் இருந்தபோது - நீண்டகாலமாக - அவர்கள் தங்களின் தாக்குதல் ஆயுதமாக 'வெளிப்படைத் தன்மை', 'பொறுப்புக்கூறல்' மற்றும் 'மக்களின் தகவல் அறியும் உரிமைக்கு மதிப்பளித்தல்' போன்றவற்றையே முன்னிறுத்தி வந்துள்ளமையால் இப்போது இந்த விடயத்தில் வெளிப்படைத் தன்மையுடன் நடக்காமல் அசாதாரண மௌனம் காத்து, பொறுப்புக் கூறலை மறந்து, மக்களின் தகவல் அறியும் உரிமைக்கு மதிப்பளிக்காமல் நடந்தால் அது புதிய அரசாங்கத்திற்கு நிச்சயம் கடுமையான சிக்கலை ஏற்படுத்தக் கூடும்.

சிறந்த கொள்கைகளை வகுப்பதற்கு உதவ நாடாளுமன்றத்தில் 'தொழில்சார் வல்லுநர்கள்', 'நிபுணர்கள்', 'கற்றறிந்தோர்' கட்டாயம் என்று பொதுஜன பெரமுனவின் 'வியத்மக' குழுவும், இப்போதைய தேசிய மக்கள் சக்தியும் கயிறு விட்டு வந்தன. அந்தக் கயிற்றின் நீள, அகலம் இப்போது அம்பலமாகி வருகின்றது.

வெளிப்படைத்தன்மை மற்றும் சிறந்த பொறுப்புக்கூறல் என்ற முழக்கங்களை முன்வைத்து பிரசாரம் செய்யும் எந்தவொரு அரசாங்கமும் நடைமுறையில் அதைக் காட்ட வேண்டும் அல்லது தங்கள் நம்பகத்தன்மையை இழக்க - துறக்க -வேண்டும்.



# சிரியாவிலிருந்து 75 பிரஜைகளை வெளியேற்றியது இந்திய அரசு

சிரியாவில் இருந்து குறைந்தது 75 இந்தியர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டுள்ளனர். அவர்கள் லெபனானுக்கு சென்று விட்டனர் எனவும் வணிக விமானங்கள் மூலம் எதிர்வரும் நாள்களில் நாடு திரும்புவார்கள் என்றும் இந்திய வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

இவ்வாறு வெளியேற்றப்பட்டவர்களில் ஜம்மு மற்றும் காஷ்மீரைச் சேர்ந்த 44 யாத்ரீகர்களும் அடங்குவர்.


அவர்கள் ஷியா முஸ்லிம்களின் முக்கியமான புனித யாத்திரைத் தளமான சையிதா சைனாப்பில் சிக்கித் தவித்தனர்.

டமாஸ்கஸில் இஸ்லாமிய கிளர்ச்சியாளர்கள் ஆட்சியைக் கைப்பற்றியமை, ஜனாதிபதி பஷர் அல் அசாத் நாட்டை விட்டு வெளியேறியதன் பின்னணியில் இந்த அறிவிப்பு வந்துள்ளது.

டமாஸ்கஸ் மற்றும் பெய்ரூட்டில் உள்ள இந்திய தூதரகங்களால் ஒருங்கிணைக்கப்பட்ட இந்த வெளியேற்றம், பாதுகாப்பு நிலைமை, சிரியாவில் உள்ள இந்திய நாட்டினரின் கோரிக்கைகள் பற்றிய விவாதங்களை தொடர்ந்து நடைமுறைக்கு வந்ததாகவும் வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது.

வெளி நாடுகளிலுள்ள இந்தியர்களின் பாதுகாப்புக்கு அரசாங்கம் அதிக முன்னுரிமை அளிப்பதாக கூறியுள்ள வெளிவிவகார அமைச்சு, சிரியா நிலைமைகளை உண்ணிப்பாக கண்காணிப்பதாகவும் குறிப்பிட்டுள்ளது.

# டில்லியின் வெப்பநிலை 4.9 டிகிரியாக பதிவு



இந்திய வானிலை ஆய்வு நிலையத்தின் தகவலின்படி, புது டில்லியில் நேற்று புதன்கிழமை குறைந்தபட்ச வெப்பநிலை பதிவாகியுள்ளது.

இந்த குளிர்கால பருவத்தில் தேசிய தலைநகரில் முந்தைய நாளின் வெப்ப நிலையான 8 டிகிரி செல்சியஸுடன் ஒப்பிடும் போது, புதன்கிழமை வெப்ப நிலை 4.9 டிகிரி செல்சியஸாகப் பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே குறைந்தபட்ச வெப்பநிலை 4. 9 டிகிரி செல்சியஸ் கடந்த ஆண்டு டிசம்பர் 15 ஆம் திகதியும் பதிவாகியிருந்ததாக இந்திய வானிலை ஆய்வு நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது.





# மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்குச் செல்ல வேண்டாம்

## நாகை மீனவர்களுக்கு எச்சரிக்கை

நாகை மாவட்ட விசைப்படகு மற்றும் நாட்டுப் படகு மீனவர்கள் இன்று முதல் மறு அறிவிப்பு வரும் வரை கடலுக்குச் செல்ல மீன்வளத்துறை தடை விதித்துள்ளது. ஏற்கெனவே கடலுக்கு மீன் பிடிக்க சென்ற மீனவர்கள் உடனடியாக கரை திரும்பவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

வங்கக் கடலில் உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வு நிலை ஆழ்ந்த காற்றமுத்த தாழ்வு நிலையாக உருமாறி உள்ளது. இது மேலும் வலுவடைந்து டெல்டா கரையை நோக்கி நகரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் டெல்டா மாவட்டங்கள் உள்ளிட்ட பல மாவட்டங்களில் கன மழை பெய்யக்கூடும் என்று எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் வங்கக் கடல் பகுதியில் காற்றின் வேகம் 45 முதல் 55 கிலோ மீற்றர் வரை வீசக்கூடும் என்பதால் மறு அறிவிப்பு வரும் வரை நாகை மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள் யாரும் கடலுக்கு மீன் பிடிக்க செல்ல வேண்டாம் என நாகை மாவட்ட மீன்வளத்துறை அறிவித்துள்ளது.

இதனால் நாகை மாவட்டத்தில் உள்ள நாகூர் பட்டினச் சேரி துவங்கி கோடியக்கரை வரை உள்ள சுமார் 25 இற்கும் மேற்பட்ட மீனவ கிராமங்களைச் சேர்ந்த 700 இற்கும் மேற்பட்ட விசைப்படகுகள் மற்றும் 3500 இற்கும் மேற்பட்ட நாட்டு படகுகள் கடலுக்கு மீன்பிடி தொழிலுக்கு செல்லாமல் அந்தந்த படகு நிறுத்தும் தளத்தில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன.

ஏற்கெனவே கடலுக்குச் சென்ற விசைப்படகுகள் உடனடியாக கரை திரும்ப வேண்டும் எனவும் மீன்வளத்துறை அறிவித்துள்ளது.

# சிரியாவின் தலைநகரில் 2 விஞ்ஞானிகள் கொலை

சிரியாவில் ஜனாதிபதி பசார் அல் ஆசாத் தப்பியோடியுள்ள நிலையில் தலைநகர் டமாஸ்கஸில் இரண்டு முக்கிய விஞ்ஞானிகள் இனந்தெரியாதவர்களால் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என ஈரானிய அரச ஊடகம் தெரிவித்துள்ளது.


இதன்படி கடந்த செவ்வாயன்று, தலைநகர் டமாஸ்கஸ் நகரின் உள்ளூர் வட்டாரங்கள், சிரிய கரிமவேதியியலாளர் கலாநிதி ஹம்தி இஸ்மாயில் நாடி படுகொலை செய்யப்பட்டுள்ளார் என தெரிவித்துள்ளன.

மேம்பட்ட வேதியியல் மற்றும் மருந்துத் துறையில் நிபுணத்துவம் பெற்ற கலாநிதி ஹம்தி இஸ்மாயில் நாடி, கடந்த செவ்வாய்க்கிழமை சிரிய தலைநகரில் உள்ள அவரது வீட்டில் இறந்து கிடந்தார்.

உள்ளூர் மற்றும் சர்வதேச இரசாயன ஆராய்ச்சிக்கு குறிப்பிடத்தக்க பங்களிப்புகளுடன் தனது துறையில் முக்கிய நபராக அறியப்பட்ட நாடியின் மரணம் “மர்மமானது” என்று உள்ளூர் வட்டாரங்கள் விவரித்துள்ளன.

அதேபோன்று பிரபல சிரிய நுண்ணுயிரியலாளர் சஹ்ரா ஹெம்சியா, டமாஸ்கஸில் உள்ள அவரது வீட்டில் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

நுண்ணுயிரியல் துறையில் சிரியாவின் பிரபல விஞ்ஞானியான சஹ்ரா ஹெம்சியா, அவரது வீட்டிற்குள் வைத்து இனந்தெரியாத நபர்களால் படுகொலை செய்யப்பட்டார்.



இந்த செய்தி அதிகாரப்பூர்வ ஆதாரங்களால் உறுதிப்படுத்தப்படவில்லை என்றாலும் மறுக்கப்படவில்லை என ஈரானிய ஊடகம் தெரிவித்துள்ளது.





# சிரியாவில் 2 நாள்களில் 500 முறை தாக்குதல்களை நடத்தியது இஸ்ரேல்

சிரியாவில் உள்ள ஆயுதங்கள் தீவிரவாதிகளின் கைகளுக்கு செல்வதை தடுக்க, அங்கு முப்படைகள் மூலம் இரண்டு நாள்களாக கிட்டத்தட்ட 500 முறை தாக்குதல்களை இஸ்ரேல் நடத்தியுள்ளது. இதில் சிரியாவின் ஆயுத கிடங்குகள் அழிக்கப்பட்டன என இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

சிரியாவில் ஜனாதிபதி அல் ஆசாத்துக்கு எதிராக, சன்னி முஸ்லிம்கள் கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இரு தரப்பினர் இடையே நீண்டகாலமாக நடந்து வந்த மோதல் கடந்த டிசம்பர் 8 ஆம் திகதி முடிவுக்கு வந்தது. சிரியா ஜனாதிபதி ஆசாத் ரஷ்யாவில் அடைக்கலம் புகுந்தார். சிரியாவில் ஆசாத் குடும்பத்தினரின் 50 ஆண்டு ஆட்சி முடிவுக்கு வந்தது.

சிரியாவில் முகமது அல் பஷீர் தலைமையில் எதிர்க்கட்சியினர் மாற்று அரசை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளன. கிளர்ச்சி படைக்கு அல்-கய்தா, ஹிஸ்புல்லா தீவிரவாதிகளின் ஆதரவு உள்ளது.

இதனால், சிரியாவின் இராணுவ கிடங்குகளில் இருந்த ஆயுதங்கள் எல்லாம் தீவிரவாதிகளின் கைகளுக்கு செல்லும் நிலை ஏற்பட்டது. இது ஆபத்து என உணர்ந்த இஸ்ரேல், சிரியாவில் உள்ள ஆயுத கிடங்குகளை எல்லாம் அழிக்க முடிவு செய்தது. இந்தப் பணியை முப்படைகளிடமும் இஸ்ரேல் ஒப்படைத்தது.

இதையடுத்து, இஸ்ரேல் இராணுவத்தின் முப்படைகளும், சிரியாவில் உள்ள விமான எதிர்ப்பு ஏவுகணைக் கிடங்குகள், விமானப்படை தளங்கள், டமாஸ்கஸ், ஹாம்ஸ் மற்றும் லதாகியா ஆகிய இடங்களில் உள்ள ஆயுத தொழிற்சாலைகள் ஆகியவற்றை குறிவைத்து 480 தாக்குதல்களை 48 மணி நேரத்துக்கு மேலாக நடத்தின.

இந்தத் தாக்குதல்களில் சிரியாவின் 15 போர்க்கப்பல்கள், நீண்ட தூர ஏவுகணைகள் அழிக்கப்பட்டன. மக்கள் மற்றும் போர்க்கப்பல்களுக்கான பாதுகாப்பை உறுதி செய்த இந்த தாக்குதல் நடவடிக்கை அவசியம் என இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

சிரியா மீது இஸ்ரேல் திடீரென பயங்கர தாக்குதல் நடத்தியதால், சிரியாவை கைப்பற்றும் முயற்சியில் இஸ்ரேல் ஈடுபட்டுள்ளதாக தகவல் பரவியது. இதை மறுத்த இஸ்ரேல் இராணுவ அதிகாரிகள், “சிரியா எல்லையில் உள்ள இஸ்ரேலின் பகுதியை கைப்பற்றத்தான் ராணுவம் நுழைந்தது. சிரியா தலைநகர் டமாஸ்கஸ் நோக்கி இஸ்ரேல் டேங்க்குகள் செல்கின்றன, என்ற செய்தி தவறானவை” என்றனர்.

இஸ்ரேல் இராணுவ அமைச்சர் கட்ஸ் கூறுகையில்,

“தெற்கு சிரியாவை ராணுவம் பலம் அற்றதாக மாற்ற இந்த தாக்குதல் அவசியம். ஆசாத் ஆட்சியை பின்பற்ற முயற்சிக்கும் எந்த ஒரு படைக்கும் இதே கதிதான் ஏற்படும். சிரியா எல்லையில் ஹிஸ்புல்லா போன்ற அமைப்புகள் மீண்டும் தீவிரவாத தாக்குதல் நடத்துவதை தடுப்பதற்காக ஆயுத கிடங்குகளை குறிவைத்து இந்த தாக்குதல் நடத்தப்பட்டது.” – என்றார்.

இதனிடையே, சிரியா எல்லையில் ஆக்கிரமிப்பு பகுதிக்குள் இஸ்ரேல் நுழைந்ததற்கு எகிப்து, ஜோர்டன், துருக்கி மற்றும் சவுதி அரேபியா ஆகிய நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. சிரியாவின் நிலையற்ற தன்மையை, தனது எல்லையை விரிவுபடுத்தும் நோக்கத்துக்கு இஸ்ரேல் பயன்படுத்தி கொள்வதாக அந்த நாடுகள் குற்றம் சாட்டியுள்ளன. சிரியாவின் ஒரு பகுதிக்குள் இஸ்ரேல் ஊடுருவியது 1974 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஒப்பந்தத்தை இஸ்ரேல் மீறுவதாக உள்ளது என ஐ.நா கூறியுள்ளது.










# ரயில் பயணச்சீட்டு முன்பதிவு மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு

நீண்ட தூர சேவையில் ஈடுபடும் ரயில்களில் முன்பதிவு செய்து பயணச்சீட்டை கொள்வனவு செய்வதிலும் மோசடி இடம்பெற்றுள்ளது.

இது குறித்து குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

சில குழுக்கள் ரயில் ஆசன முன்பதிவு பயணச்சீட்டுகளை இணையத்தளத்தில் கொள்வனவு செய்து பின்னர் அதிக விலைக்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்கின்றமை குறித்து பல முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன என பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக பயணிகளுக்கு பாரிய அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாக பிரதி அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த மோசடியில் ஈடுபட்டவர்களின் தொலைபேசி இலக்கங்களும் குற்றப்புலனாய்வுதிணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன என அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அதற்கமைய, இந்த மோசடியுடன் தொடர்புடைய சகலரையும் உடனடியாக சட்டத்தின் முன் நிறுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

முன்பதிவு செய்யப்பட்ட ஆசனப் பயணச் சீட்டுகள் தொடர்பான சோதனைகளை கடுமையாக்குமாறும் பணிப்புரை விடுத்துள்ளதாக பிரதி அமைச்சர் பிரசன்ன குணசேன கூறியுள்ளார்.



# பெருந்தோட்ட பகுதிகளில் மாடிக்குடியிருப்புத் திட்டம்

பெருந்தோட்டங்களில் நிலவும் குடியிருப்பு பிரச்சினையை நிவர்த்திப்பதற்காக மாடிக்குடியிருப்புகளை அமைப்பதற்கு திட்டமிட்டுள்ளதாக பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவகத்தின் அனுமதியின் கீழ் 6 இற்கும் குறைந்த மாடிகளை கொண்ட அடுக்குமாடி குடியிருப்புகளை அமைப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.

பெருந்தோட்ட பகுதிகளில் 150,000 இற்கும் மேற்பட்ட வீடுகளுக்கான தேவை காணப்படுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இதனிடையே, இந்திய நிதியுதவியின் கீழ் நிர்மாணிக்கப்பட்ட 10,000 வீடுகளுக்கான பணிகள் பூர்த்தியாகியுள்ளதுடன் மேலும் 990 வீடுகளை மக்களிடம் கையளிக்க திட்டமிட்டுள்ளதாகவும் பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் சமூக உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி தெரிவித்துள்ளார்.




# கொழும்பு துறைமுக முனைய அபிவிருத்தி திட்டத்துக்கான நிதியுதவி கோரிக்கையை மீளப் பெற்றது அதானி குழுமம்

கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனைய அபிவிருத்தி திட்டத்துக்காக அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி கூட்டுத்தாபனத்திடம் முன்வைத்த நிதியுதவிக்கான கோரிக்கையை இந்தியாவின் அதானி குழுமம் மீளப் பெற்றுள்ளது.

அதானி குழுமத்தின் பங்களிப்புடன் முன்னெடுக்கப்படும் கொழும்பு துறைமுக மேற்கு முனைய அபிவிருத்தி திட்டத்திற்கு, அந்த குழுமத்தின் கோரிக்கைக்கு அமைய 553 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி வழங்குவதாக அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்தி கூட்டுத்தாபனம் கடந்த ஆண்டு அறிவித்திருந்தது.

இந்தநிலையில், இந்த கோரிக்கையை அதானி குழுமம் மீளப் பெற்றுள்ளது. அதற்கமைய, கொழும்பு மேற்கு முனையத் திட்டத்துக்காக உள் நிதி திரட்டல்கள் மூலம் நிதியளிப்பதாக அதானி குழுமம் அறிவித்துள்ளது.

இதேவேளை, கொழும்பு துறைமுகத்தின் மேற்கு முனையத் திட்டத்திற்கான ஆயத்தங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருவதாக சுட்டிக்காட்டியுள்ள அதானி நிறுவனம் 2025ஆம் ஆண்டின் முற்பகுதியில் திட்டத்தை ஆரம்பிப்பதற்கு தயாராகவுள்ளதாக தெரிவித்துள்ளது.



# அதானி காற்றாலை குறித்து அமைச்சரவையில் விடயங்களை முன்வைக்கும் வலுசக்தி அமைச்சு

அதானி நிறுவனம் இலங்கையில் நிர்மாணிக்கவுள்ள காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் தொடர்பில் அமைச்சரவையில் விடயங்களை முன்வைக்கவுள்ளதாக வலுசக்தி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த திட்டம் தொடர்பில் ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கையின் அடிப்படையிலே அமைச்சரவையில் விடயங்கள் முன்வைக்கப்படவுள்ளன.

இந்த குழு பல்வேறு துறைகள் ஊடாக ஆய்வுகளை மேற்கொண்டு காற்றாலை மின்னுற்பத்தி திட்டம் தொடர்பான பரிந்துரைகளை வழங்கியுள்ளதாக அமைச்சு தெரிவித்துள்ளது.

மன்னார் மற்றும் பூநகரி பகுதிகளில் நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள காற்றாலை மின்னுற்பத்தி திட்டத்தின் மூலம் 484 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்காக அதானி நிறுவனம் ஏற்கனவே ஓரளவு முதலீடுகளை மேற்கொண்டுள்ளதாக வலுசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

எவ்வாறாயினும், குறித்த குழுவின் அறிக்கை மற்றும் பரிந்துரைகளை ஆராய்ந்ததன் பின்னர் அமைச்சரவை இந்த விடயம் தொடர்பில் தீர்மானங்களை எடுக்கும் என வலுசக்தி அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

# யாழில் பாரதி நினைவு தினம்









இந்திய துணை தூதரகத்தின் ஏற்பாட்டில் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் 142வது நினைவு தினம் நேற்றைய தினம் யாழ்ப்பாணம் கலாச்சார மண்டபத்தில் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், வடக்கு மாகாண அவை தலைவர் சி.வி.கே சிவஞானம், இந்திய துணைத் தூதுவர் சாய் முரளி, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் சிறிசற்குணராஜா, வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், தூதரக அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதன் போது மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் உருவப்படத்திற்கு மலர் அஞ்சலி செலுத்தப்பட்டு நினைவுப் பெயர்களையும் இடம் பெற்றது.



# ஹட்டனில் டிக்கோயா கால்வாயில் இரத்தினக்கல் தோண்டியோர் கைது

அனுமதிப்பத்திரம் இன்றி சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் தோண்டிய ஆறு சந்தேக நபர்களை ஹட்டன் பொலிஸ் ஊழல் ஒழிப்பு பிரிவின் அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

ஹட்டன் நகரிலிருந்து காசல்ரி நீர்த்தேக்கத்திற்கு பாயும் டிக்கோயா கால்வாயில் (ஓடையில் )இரத்தினக்கல் அகழ்ந்துகொண்டிருந்த அறுவரே கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்கள் இரத்தினக்கல் அகழ்வதற்கு பயன்படுத்திய உபகரணங்கள் சிலவற்றையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

டிக்கோயா– வனராஜா தேயிலைத் தொழிற்சாலைக்கு பின்புறம் உள்ள டிக்கோயா கால்வாயில் சிலர் சட்டவிரோதமான முறையில் இரத்தினக்கல் அகழ்கின்றனர் எனஜ் கிடைத்த தகவலையடுத்து ஹட்டன் பொலிஸார் சுற்றிவளைப்பு நடத்தி சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இரத்தினபுரி, கஹவத்தை, பலாங்கொடை, ஹட்டன் மற்றும் டிக்கோயா ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த 25–40 வயதுக்குட்பட்டவர்கள் எனவும், கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளனர் எனவுன் சுற்றிவளைப்பை மேற்கொண்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.



# மட்டு. கிராம அலுவலர்களின் நடவடிக்கை 3 கொள்கலன்களில் கசிப்பு மீட்டு அழிப்பு!

( எஸ். சதீஸ் )

மட்டக்களப்பு, மண்முனை தென் மேற்கு பிரதேச செயலகப்பிரிவிற்குட் பட்ட தாந்தாமலை கிராம உத்தியோ கத்தர் பிரிவிலுள்ள காட்டுப் பகுதியில் கிராம உத்தியோகத்தர்கள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையால் மூன்று கொள்கலன் சட்டவிரோத கசிப்பு நேற்றுப் புதன் கிழமை கைப்பற்றப் பட்டு அழிக்கப்பட்டுள்ளது.

கிராம மக்கள் மூலம் தாந்தாம லையை அண்டிய கிராமப் பிரிவுகளில் கடமையாற்றும் கிராம உத்தியோகத் தர்களுக்கு கிடைக்கப்பெற்ற இரக சிய தகவலுக்கமைவாக, காட்டுப்பகுதி யில் மேற்கொண்ட தேடுதலில் 12,000 மில்லி லீட்டர் அடங்கிய சட்டவிரோத கசிப்பு 03 கொள்கலன்களில் இருந்து கைப்பற்றப்பட்டது.

இந் நடவடிக்கையை கிராம உத்தி யோகத்தர்கள் மிகவும் துணிச்சலான முறையில் முன்னெடுத்துள்ளனர்.

1963 ஆம் ஆண்டு பெப்ரவரி 22 ஆம் திகதிய வர்த்தமானிக்கு வெளி யீட்டுக்கு அமைவாக, மதுவரி கட்டளைச் சட்டம் 33,35 மற்றும் 48 அ பிரிவின் சட்டத்தின்படி கிராம உத்தியோகத்தர் களால் இப்பணி மேற்கொள்ளப்பட்ட தாக இந்நடவடிக்கையில் ஈடுபட்ட கிராம உத்தியோகத்தர்கள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவத்தின் போது, சந் தேக நபர்கள் அவ்விடயத்தில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனவும், கைப் பற்றப்பட்ட கசிப்பு யாவும் அவ்விடத்தில் அழிக்கப்பட்டன எனவும் கிராம உத்தி யோகத்தர்கள் மேலும் தெரிவித்தனர்.



# மீன்பிடி, கடல்சார் நடவடிக்கைகளை தவிர்க்கவும்: வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தல்

குறைந்த காற்றமுத்த தாழ்வு மண் டலத்தால் புத்தளத்திலிருந்து மன்னார் – காங்கேசன்துறை ஊடாக முல்லைத்தீவு வரையான ஆழமான மற்றும் ஆழ மற்ற கடற்பரப்புகளில் மீன்பிடி, கடல் சார் நடவடிக்கைகளை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

தென்மேற்கு வங்காள விரிகுடாவில் உருவாகியுள்ள குறைந்த காற்றமுத்த தாழ்வுப் பகுதி எதிர்வரும் 24 மணித் தியாலத்தில் மேற்கு வடமேற்கு திசை யில், இலங்கையின் வடக்கு கரையை அண்மித்து தமிழகத்தை நோக்கி நகரக் கூடும் என எதிர்வு கூறப்பட்டுள்ளது.

அதேநேரம், திருகோணமலையி லிருந்து காங்கேசன்துறை மற்றும் கொழும்பு ஊடாக காலி வரையான கடற்பரப்புகளில் மணித்தியாலத்துக்கு 30 முதல் 40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் காற்று வீசக்கூடும்.

அத்துடன், திருகோணமலையிலி ருந்து காங்கேசன்துறை ஊடாக புத் தளம், கொழும்பு மற்றும் காலி வரை யான கடற்பரப்புகளில் மணித்தியாலத் துக்கு 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசக்கூடும் என வளிமண்டலவி யல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

இதேவேளை, வடக்கு, வடமத்திய, கிழக்கு மற்றும் வடமேல் மாகாணங்க ளில் இடைக்கிடையே மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

அதன்படி, வட மாகாணத்தின் சில பகுதிகளில் 100 மில்லி மீற்றருக்கும் அதிகளவான பலத்த மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும்.

நாட்டின் ஏனைய பகுதிகளில் மாலை அல்லது இரவில் மழை அல்லது இடியு டன் கூடிய மழை பெய்யக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.



# எலிக் காய்ச்சல் பரவல் தடுப்புக்கு முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அறிவுறுத்தல்

தற்போது வடக்கில் பரவி வருவதாகக் கருதப்படும் எலிக்காய்ச்சல் தொடர்பில் பொது மக்கள் முன்னெடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன் சில அறிவுறுத்தல்களை விடுத்துள்ளார். அவை வருமாறு:-

யாழ்ப்பாண மாவட்டத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளநிலைமைக்கு பின்னர் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி ஆகிய சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் ஒரு வகையான காய்ச்சல் பரவி வருகின்றது. இக்காய்ச்சல் காரணமாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நான்கு இறப்புக்களும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இரண்டு இறப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இந்த இறப்புக்களில் இரண்டு பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும், இரண்டு சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும், ஒன்று கரவெட்டி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலும் ஏற்பட்டுள்ளன. யாழ் போதனா வைத்தியசாலையில் இறந்த ஒருவர் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்தவர். இறந்தவர்களில் பெரும்பாலானோர் இளம் வயதினராக காணப்படுகின்றனர். இறந்தவர்கள் எல்லா இறப்புக்களும் சுவாசத்தொகுதி பாதிப்பினாலேயே ஏற்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இந்த காய்ச்சலுடன் நவம்பர் மாதத்தில் பன்னிரெண்டு நோயாளர்களும் டிசம்பர் மாதத்தில் இருபத்தொரு நோயாளர்களுமாக மொத்தமாக இதுவரை முப்பத்து மூன்று நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். தற்போது பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் இந்தக் காய்ச்சலுடன் இருபது நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இக் காய்ச்சலானது எலிக் காய்ச்சலாக இருக்கலாமென சந்தேகிக்கப்படுகிறது. இக் காய்ச்சல் எந்த வகையானது என்பதை உறுதிப்படுத்துவதற்காக கொழும்பு மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்திற்கும் கண்டி போதனா வைத்தியசாலைக்கும் குருதி மாதிரிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

மழை வெள்ளத்தில் எலி, ஆடு, மாடு போன்ற விலங்குகளின் எச்சங்கள் கலப்பதன் மூலம் இந்நோய்க்கிருமிகள் வெள்ள நீரினில் கலக்கின்றன. பொதுமக்கள் இந்த வெள்ளநீருடன் தொடுகை ஏற்படும் போது அவர்களது தோலிலுள்ள சிறு காயங்கள், புண்கள் மூலம் உடலின் குருதிச் சுற்றோட்ட தொகுதியை சென்றடைந்து எலிக்காய்ச்சல் நோய் உண்டாகிறது. மேலும் இக் கிருமிகள் கலந்த அசுத்தமான நீரைப் பருகுவதனாலும் எலிக்காய்ச்சல் நோய் ஏற்படலாம்.

இக்காய்ச்சலிலிருந்து தங்களை பாதுகாத்துக் கொள்வதற்கு பின்வரும் விடயங்களை பின்பற்றுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள்கின்றோம்.

1. காய்ச்சல் ஏற்பட்டால் ஒருநாள் காய்ச்சலாக இருந்தாலும் உடனடியாக அருகிலுள்ள அரசாங்க வைத்தியசாலையை நாடவும். காய்ச்சல் ஏற்பட்டு தாமதமாக அரச வைத்தியசாலைகளுக்கு வருகை தந்தமையினாலேயே பெரும்பாலான இறப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

2 தகுந்த மருத்துவ ஆலோசனையின்றி நேரடியாக மருந்தகங்களில் மருந்துகள் வாங்கிப் பாவிப்பதை தவிர்த்துக்கொள்ளவும்.

3.தற்போதைய காலப்பகுதியில் அவசியமின்றி வெள்ள நீரில் இறங்குவதை தவிர்த்துக்கொள்ளவும்.

4. வயல்கள், சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் கால்களுக்கு பாதுகாப்பு அங்கிகளை அணிந்துகொள்ள வேண்டும். கால்களில் காயங்கள் அல்லது புண்கள் உள்ளவர்கள் வெள்ள நீரில் இறங்குவதைத் தவிர்த்துக்கொள்ளவும்.

5.கட்டாயமாக கொதித்து ஆறிய நீரைப் பருகவும்.

6.வெள்ள நீரினால் அசுத்தமான கிணறுகளை இறைத்து குளோரின் இடவும்.

7.தற்போதைய காலப்பகுதியில் வெள்ள நீரால் நிரம்பியுள்ள குளங்களில் குளிப்பதை தவிர்த்துக் கொள்ளவும்.

8.தற்போது நோய் பரவிவரும் பருத்தித்துறை, கரவெட்டி, சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளில் வயல்கள், சதுப்பு நிலங்கள், வடிகால்களில் வேலை செய்பவர்கள் தமக்குரிய தடுப்பு மருந்துகளை அருகிலுள்ள சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

எனவே பொதுமக்கள் மேற்படி ஆலோசனைகளை பின்பற்றி இந்த நோயிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். – என்று உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 12.12.2024

## மேஷம்

இன்று பதற்றமும் கவனமின்மையும் காணப்படும். இதனை சமாளிக்க அமைதியை மேற்கொள்ள வேண்டும். இன்று சகஜமான அணுகுமுறையுடன் உங்கள் பணிகளில் கவனம் செலுத்த வேண்டும்.

பணியிடத்தில் பதட்டம் காரணமாக தாமதமாக பணிகள் நடைபெறும். பணிகளைக் கையாளும் போது பொறுமையான அணுகுமுறை தேவை.

உங்கள் துணையின் விருப்பபடி நடந்து கொள்வதும் நட்பான அணுகுமுறை கொள்வதும் இருவரும் மகிழ்ச்சியுடன் இருக்க உதவும்.

பணப்புழக்கம் குறைந்து காணப்படும் . அதிகரிக்கும் செலவுகள் உங்களுக்கு கவலையை அளிக்கும்.

அதிக பதட்டம் காரணமாக தலைவலி ஏற்படலாம். இறை வழிபாடும் பிரார்த்தனையும் மேற்கொள்வது சிறந்தது.

## ரிஷபம்

இன்று ஸ்திரமான, இலக்குகளை வெல்லக்கூடிய இனிமையான தருணங்களை சந்திக்கும் நாள். இன்று முக்கிய முடிவுகளை எடுக்கலாம்.

பணியிடத்தில் வெற்றிகரமான பலன்கள் கிடைக்கும். புதிய பணி வாய்ப்புகள் கிடைக்கும். இது உங்களுக்கு திருப்தியை அளிக்கும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக இருப்பதன் மூலம் நல்லுறவு வளரும். இருவரிடையே பரஸ்பர புரிந்துணர்வு ஏற்படும்.

பண வரவு மகிழ்ச்சியை அளிக்கும். உங்கள் கடின உழைப்பின் காரணமாக நீங்கள் ஊக்கத்தொகை வகையில் பணம் பெறுவீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## மிதுனம்

இன்றைய நாள் உங்கள் எதிர்பார்ப்பின் படி இருக்காது. எதிர்மறையான பலன்கள் ஏமாற்றத்தை தரும். எந்த முடிவையும் எடுப்பதற்கு முன் ஒன்றுக்கு இரண்டு தடவை யோசிக்க வேண்டும். எதிர்மறை எண்ணங்களையும் பாதுகாப்பின்மை உணர்வையும் தவிர்த்தல் வேண்டும்.

பணிகள் அதிகமாக காணப்படும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையுடன் சிறந்த புரிந்துணர்வை பராமரிக்க இயலாது. உங்களின் எரிச்சல் உணர்வை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

பண வரவு குறைந்து காணப்படும். அதிக செலவுகள் காரணமாக சேமிப்பது கடினமாக இருக்கும்.

## கடகம்

இன்று சவாலான சூழ்நிலைகள் காணப்படும். அதனால் வெறுமையை உணர்வீர்கள். உறுதியான போக்கை மேற்கொள்வதன் மூலம் நீங்கள் பிரச்சினைகளை சமாளிக்க முடியும்.

உங்கள் கடின உழைப்பிற்கு தகுத்த பலன்கள் கிடைக்காது. இதற்குஉங்கள் பணிகளை சிறப்பாக திட்டமிடாததே காரணம்.

உணர்ச்சி வசப்படுவதன் மூலம் உறவின் நல்லிணக்கம் பாதிக்கப்படும். இதனை உங்கள் துணையிடத்தில் வெளிப்படுத்துவீர்கள்.

இன்று லாபம் நஷ்டம் இரண்டும் சேர்ந்து காணப்படும். பணப்புழக்கம் குறைவாக காணப்படும். பண இழப்புகளை தவிர்க்க நீங்கள் பணத்தை கவனமாகக் கையாள வேண்டும்.

## சிம்மம்

இன்று பதற்றமான சூழ்நிலை காணப்படும்.. ஆன்மீக ஈடுபாட்டின் மூலம் இந்தச் சூழலைக் திறமையாகக் கையாள முடியும்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பயனுள்ள யுத்திகளைக் கையாண்டு கவனமாக பணியாற்றினால் பணிகள் சுமூகமாக நடக்கும்.

உங்கள் துணையிடம் அகந்தைப் போக்கை தவிர்ப்பது நல்லது. இதனால் உறவின் நல்லிணக்கத்தைக் கெடுக்கும் கவனமற்ற வார்த்தைகளை தவிர்க்கலாம்.

இன்று வரவும் செலவும் இணைந்து காணப்படும். பணத்தை கையாளும் போது கவனம் தேவை.

இன்று ஆரோக்கியம் சுமாராக இருக்கும். சளி சம்பந்தமான பிரச்சினைகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

## கன்னி

இன்று நீங்கள் சிறந்த மன ஆற்றலுடனும் காடுப்பட்டுடனும் காணப்படும் சிறந்த நாள். இன்று பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் ஈடுபடுவதன் மூலம் அமைதி பெறுவீர்கள்.

இன்று பணிகளை குறித்தநேரத்தில் முடிக்கும் சூழல் காணப்படும். பணிகளை விரும்பி எளிதாக ஆற்றுவீர்கள்.

உங்கள் துணையுடன் மகிழ்ச்சியான தருணங்களை பகிர்ந்து கொள்வீர்கள். இருவரிடையே பரபஸ்பர மதிப்பு உயரும்.

பணப்புழக்கம் இன்று சிறப்பாக இருக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள விஷயங்களுக்கு பயன்படுத்துவீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இன்று நீங்கள் முழு ஆரோக்கியத்தை உணர்வீர்கள்.

## துலாம்

இன்று நீங்கள் நம்பிக்கையுடன் இருந்தால் உங்கள் இலக்குகளில் வெற்றி அடையலாம்.பதட்டம் மற்றும் பாதுகாப்பின்மை உணர்வை கட்டுப்படுத்தி நம்பிக்கையுடன் இருக்க வேண்டும்.

உங்கள் பணியில் சில தடைகள் காணப்படும். உறுதியுடன் இருந்தால் தடைகளை சமாளித்து சிறப்பாக செயலாற்றலாம்.

தகவல் பரிமாற்ற பிரச்சினையும் கருத்து வேறுபாடும் காணப்படும். அமைதியாக இருப்பது மிகவும் உதவிகரமாக இருக்கும்.

பணப்புழக்கம் போதுமானதாக இருக்காது. இந்து கூடுதல் செலவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்காது. வயிற்று உபாதை காரணமாக அவதிப்பட நேரலாம்.

## விருச்சிகம்

அமைதியாக இருப்பதன் மூலம் முறையான முடிவுகளை எடுக்க இயலும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் பதட்டமின்றி சமநிலையில் இருக்கலாம்.

இன்று பணிகள் அதிகமாக காணப்படும். இதனால் பணியில் தவறுகள் நேரலாம். எனினும் கவனமாகப் பணியாற்றினால் இன்று சிறப்பாக இருக்கும்.

இன்று உங்கள் துணையிடம் நட்பான அணுகுமுறை பராமரிப்பது நல்லது. இதனால் உறவில் மகிழ்ச்சியும் நல்லிணக்கமும் காணப்படும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிகரிக்கும் பொறுப்புகளை சமாளிப்பது கடினமாக உணர்வீர்கள்.

பதட்டம் காரணமாக முதுகு வலி ஏற்படலாம். பிரார்த்தனை மூலம் ஆறுதல் பெறலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 12.12.2024




இன்று நீங்கள் எளிதான அணுகு முறையை மேற்கொள்ள வேண்டும். உரையாடும் போது வார்த்தைகளில் கவனம் தேவை. இனிமையான வார்த்தைகள் நல்ல பலனைத் தரும்.

இன்று புதிய பணி வாய்ப்புகளை இழக்கும் அதிர்ஷ்டமற்ற நிலை காணப்படும். இன்று ஏமாற்றமான சூழ்நிலைகளை சந்திக்க நேரும். இதனால் உங்கள் மன உறுதியை இழந்து விடாதீர்கள்.

உங்கள் துணையுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. இதனால் சூடான விவாதங்கள் ஏற்படலாம். இது மகிழ்ச்சியைக் குறைக்கும்.

இன்று பண வரவிற்கான வாய்ப்பு குறைவு. பண இழப்பு ஏற்படும் என்பதால் பணத்தை கவனமாக கையாள வேண்டியது அவசியம்.




உங்கள் மன உறுதி காரணமாக நீங்கள் வெற்றி பெறலாம். இன்று சிறந்த முன்னேற்றம் கண்டு மகிழ்வீர்கள்.

உங்கள் திறமைகள் வெளிப்படும். அது உங்கள் செயல்திறனில் பிரதிபலிக்கும். உங்கள் சக பணியாளர்களுக்கு நீங்கள் ஒரு எடுத்துக்காட்டாக இருப்பீர்கள்.

இனிமையான வார்த்தைகளும் நல்ல புரிந்துணர்வும் உங்கள் துணையை மகிழ்ச்சியாக வைத்திருக்க உதவும்.

இன்று போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் சேமிப்பு ஆற்றல் அதிகரிக்கும்.

இன்று உங்களிடம் அதிக ஆற்றல் காணப்படும். இதனால் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். இந்த நாளை நன்கு பயன்படுத்திக் கொள்ளுங்கள்.




இன்று உங்களிடம் தைரியமான உறுதியான அணுகுமுறை காணப்படும். உங்கள் இலக்குகளில் வளர்ச்சியும் வெற்றியும் அடைவீர்கள்.

பணிகளை குறித்தநேரத்தில் முடிப்பதற்கான சாத்தியம் உள்ளது. உங்கள் செயல்திறனில் நல்ல தரத்தை பராமரிக்க இயலும்.

உங்கள் மகிழ்ச்சியான உணர்வுகளை உங்கள் துணையிடம் வெளிபடுத்துவீர்கள்.இருவரும் மகிழ்ச்சியான தருணங்களை இணைந்து கொண்டாடுவீர்கள்.

அதிக பண வரவு காரணமாக உங்கள் வங்கியிருப்பு அதிகரிக்கும். உங்கள் பணத்தை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

உங்களிடம் காணப்படும் மன உறுதி காரணமாக இன்று முழு ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




இன்று நீங்கள் நம்பிக்கையுடன் உங்கள் செயல்களை மேற்கொள்ளும் வாய்ப்பு உள்ளது. புதிய நண்பர்களைப் பெறுவீர்கள். அவர்களின் ஆதரவு கிடைக்கும்.

உங்கள் பணிகளை எளிதாக செய்து முடிப்பீர்கள்.உங்கள் செயல்திறன் மற்றவர்களின் கவனத்தை ஈர்க்கும். உங்களுக்கு பாராட்டு கிடைக்கும்.

நேர்மையான அணுகுமுறை மூலம் உங்கள் துணையுடன் சுமூகமான உறவை பராமரிப்பீர்கள்.

இன்று பண வரவு அதிகமாக காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று உங்கள் ஆரோக்கியம் சாதாரணமாக இருக்கும். உங்களிடம் இன்று மன உறுதி காணப்படும்.




Discover the Ultimate Investment & Dynamic Destinations which Redefines the Face of Luxurious Living

OUR ONGOING PROJECTS
- No.06, 19th Lane, Colombo 03.
- No. 15A, Layards Rd, Colombo 04.
- No.30, Hotel Road, Mount Lavinia.
- No. 02, Glenfall Road, Nuwara Eliya.
- No.01, Havelock Place, Colombo 05.
- No. 34/2, De Saram Road, Mount Lavinia.
- No. 35B, High Level Road, Nugegoda.
- No. 35, Ramakrishna Road, Colombo 06.



Blue Ocean GROUP OF COMPANIES | KELSEY HOMES 40 Years Housing Excellence

+94 777 546 546 | +94 770 774 774

LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA

No. 9A, De Fonseka Place, Colombo 04, Sri Lanka.

எந்தக் காலத்திலும்.. எந்த வடிவத்திலும்
உங்களோடு நாங்கள்...



செந்தியின்
தமிழன்
வழிகாட்டி
Tamils' Guide
Since 1996

416-615-4646 info@tamilsguide.com

www.tamilsguide.com